189

நாம் யார்?

189

OF THE REGISTRAR OF BOOKS
26 JUL 1947
MADRAS

R34
V47
103850

ஆசிரியர்

'விவேகி'

A. G. Sampath Naidu

SHIPPING CLEARING
&
FORWARDING AGENT

No. 14, RAMASWAMY STREET,

G. T. MADRAS.

அ. கோ. சம்பத் நாயுடு,

எற்றுமதி இறக்குமதி எஜண்ட்,

14, ராமசாமி தெருவு,

மண்ணடி :: மதருஸ்.

செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை— 5,000 M.S.277

நாம் யார்?

ஆக்கியோன்

'விவேகி'

வெளியிடுவோர்

திராவிட கலா நிலையம்

55, முக்தாருன்னிஸாபேகம் தெரு,

மவுண்ட் ரோடு, :: சென்னை.

பதிப்புரிமையுடையது]

[விலை அணா 8

பொருள் அடக்கம்

அத்தியாயம்.		பக்கம்.
	குறிக்கோள்	௩
	மதிப்புரை	௫
1.	நானூறு நற் பழமொழிகள் ...	1
2.	சங்க இலக்கியச் சான்றுகள் ...	7
3.	மனுநீதி தர்ம சாஸ்திரம்	11
4.	முதலாளி தத்துவம்	16
5.	இராவணன் யார்?	20
6.	மூவேந்தர் நிலைமை	23
7.	ஆரியமும் வடநாடும்	29
8.	ஆரியத்தின் வைரிகள்	33
9.	மக்களை மயக்கிய மதங்கள் ...	36

ARCHIVES

குறிக்கோள்

"நாம் யார்?" இது என்ன கேள்வி! நம்மை நமக்கே தெரியாதா!! நாமும் மனிதர்கள் அல்லவா!!! ஆம், நாம் சந்தேகம் இல்லாமல் மனிதர்களே. ஆனால்! நம்மை யார் தொடக்கூடாது, பார்க்கக்கூடாது, சம்பந்தப் படுத்திக்கொள்ளக்கூடாது என்று கூறுகிறார்களோ! அவர்கள் யார்?......! அப்படியானால், நாம் யார்?

"நான் யார்?" இதை ஏதோ! வேதாந்த விசாரணை என்பர். "நாம் யார்?" இதைத்தான் இன (சமுதாய) விசாரணை என்று கூறுவது.

நாம் யார் என்று இன விசாரணை நடத்தும்படியாக அவ்வளவு அனாதைகளாகவே நாம் இருக்கிறோம்!—இல்லை என்றுதுள்ளினர் பாரத மாதாவின் புத்திரர்களாகிய தேசிய வாதிகள்—இல்லை என்று துடித்தனர் கண்மூடிப் பழக்கத்தைக் கடைப் பிடிக்கும் மதவாதிகள்—இல்லை என்றே சொன்னான் ஏகாதிபத்திய வாதியும். ஆனால்! சரித்திரவாதி மட்டுமே உண்மையை ஒப்புக்கொண்டான்.

தேசியவாதி மதி மயக்கத்தினால் நம்மையும் பிணைத்துக் கொண்டு இந்தியாவில் ஒரே இனம் என்று வாதாடினான். மதவாதி குருட்டுத்தனமாக நம்மையும் இந்துக்கள் என்றே புலம்பிக் கொண்டிருந்தான், ஏகாதிபத்திய வாதியோ தனது சாம்ராச்சியம் சிதையாமல் இருப்பதற்காக நம்மையும் இந்தியன் என்ற ஒரே வார்த்தைக்குள் புதைத்துவிடத் துணிந்தான்.

இம்மூவருமே இன்றைய அரசியல் அரங்கில் தமது குற்றங்களை ஒப்புக்கொண்டு வெட்கத்தால் தலைகளைத் தொங்க விட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இனி, இந்திய உபகண்டத்தின் உண்மைச் சரித்திரம் மறைக்கப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடர ஆரம்பிக்கும். அதை நிரந்தரமாக மறைத்துவிட யாராலும் முடியாது என்பதற்குப் பண்டித ஜவகர்லால் நேருவே ஒரு உதாரணமாக விளங்குகிறார்.

கொஞ்சகாலத்திற்கு முன்பு பண்டித ஜவகர்லால் நேரு இந்திய உபகண்டத்தின் பிரிவினையை ஒரே மூச்சாக எதிர்த்துக் கொண்டிருந்தார். அப்போது இந்தியா ஒரே சமுதாயத்தையுடைய ஒரு தேசமே என்று கர்ச்சித்தார். ஆனால்! அதற்கு முன்பே அவர் அத்தகைய தன்னுடைய கூற்றைத் தானே மறுத்துத் தனது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களில் சரித்திரப் பூர்வமாக விளக்கியிருக்கிறார்.

ஆகவே பண்டித ஜவஹர்லாலுடைய ஒரே வாயிலிருந்து இரண்டுவித முரண்பாடான சொற்கள் வரக்காரணம்! ஒன்று சரித்திரத்தின் மறைக்க முடியாத உண்மைச் சக்தி; மற்றொன்று அடிக்கடி தோன்றி மறையும் ஏகாதிபத்திய ஆவல், சுயநலம் சுரண்டல் தன்மை முதலியன எனலாம். இவ்வுண்மைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதின் மூலம் நாம் யார் என்பதைச் சரித்திரப் பூர்வமாக விளக்குவதே இந்நூல் எழுதியதின் குறிக்கோளாகும்.

இந்நூலுக்கு மனமுவந்து மதிப்புரை அளித்துதவிய திராவிட நாட்டின் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுக்கு எனது வணக்கம் மிகுந்த நன்றி என்றென்றும் உரித்தாகுக.

இங்ஙனம்,

'விவேகி'



மதிப்புரை

"நாம் யார்?" என்ற இச்சிறிய நூலின் சில பாகங்களைப் படித்தோம்.

சரித்திர காலம் தொட்டு இந்த நாட்டை ஆண்டு வந்த மக்களை, இந்த நாட்டுச் சொந்தக்காரர்களை, நாட்டுக்கு இன்றியமையாத தேவைகளான எல்லாத் தொழில்களையும் செய்து மக்கள் சமுதாயத்தைக் காக்கும் பெருங்குடி மக்களாகிய திராவிடர்களைச் சூத்திரன் என்றும், பார்ப்பானுடைய வைப்பாட்டி மகன், அடிமை என்றும் சொல்லி அந்தப்படியே சாஸ்திரங்கள், புராணங்கள், சட்டங்கள் ஆகிய சகலத்திலும் புகுத்தி இழிவு படுத்தி இந்து மக்கள் என்ற பெயரைக் கொடுத்து ஆரியர்கள் நம்மைத் தாழ்த்துகிறார்கள்.

உண்மையிலேயே இந்து மதம் நம்முடைய மதம் அன்று. திராவிடரது கொள்கை வேறு, இந்து மதம் என்பதின் கொள்கை வேறு. ஆரியமே, ஆரியரது மேன்மையே, திராவிடர்களது இழிவேதான் இந்து மதமாய்த் திகழ்கின்றது. திராவிடர்களாகிய நாம் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது நமது முடிவு. இதைத் தக்க ஆராய்ச்சிகளுடன் தெளிவாகத் தோழர் 'விவேகி'யவர்கள் இந்நூலில் விளக்கியுள்ளார்.

அண்மையில், திராவிட கலா நிலையத்தினின்றும் வெளிவந்த "திராவிடமும் ஆரியமும்" என்ற நூலை வெளியிட்டவரும் இவ்வாசிரியரே யாவார்.

வெள்ளைத் தாளைக் கறுப்பு மையால் ஒத்திக் குப்பைக் கூடைகளை நிரப்பிச் செல்வாக்கும், அறிவுத்திறனுமுள்ள பேச்

சாளர், எழுத்தாளர் பெயர்களைச் சுமந்துகொண்டு வெகு வெகு வெற்றுரை நூல்கள் வெளிக் கிளம்பிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அறிவும், பயனும் விளையும் நூல்கள் வெகு சிலவே யாகும். அப்படிப்பட்ட வெகு சில நூல்களில் "நாம் யார்?" என்ற இந்நூலும் ஒன்று எனக் கருதுகிறோம்.

எனவே, ஆரிய-திராவிட உண்மைத் தன்மை உணர அவாவுறும் மக்களுக்கு இது ஒரு அளவுக்காவது பயன்படத் தக்க நூல் என்பதை எடுத்துக் காட்டுகிறோம்.

தோழர் 'விவேகி' அவர்களால் இனியும் இப்படிப்பட்ட பல நூல்கள் வெளியாக வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

ஈ. வெ ராமசாமி.

திராவிட நாட்டு மக்களுக்கு ஓர் நற்செய்தி

அன்புடையீர்!

எங்கள் மின்சாரத் தொழிற்சாலை மூலம், திராவிட நாட்டிலுள்ள ஒவ்வொரு வீடும், நிலையமும் விஞ்ஞான வசதிகளோடு பிரகாசிப்பதற்குரிய எல்லாவிதமான கருவிகளுடன், தேர்ச்சி மிக்கத் தொழிலாளர்களைப் பெற்றுக் குறித்த காலத்தில், குறைந்த விகிதத்தில் சிறந்த பலன் அடைவீர்களாக.

இங்ஙனம்,

N. ஆறுமுகம், L. E. E.

புவன எலக்டிரிக் கம்பெனி,

எலக்டிரிக்கல் எஞ்சினியர்ஸ், கண்டிராக்டர்ஸ் & டீலர்ஸ்,

– புவனகிரி P.O., (via) சிதம்பரம் S. I. Ry. –

நாம் யார்?

1. நானூறு நற் பழமொழிகள்

நாம் இந்தியனும் அல்ல! நமது மதம் ஹிந்து மதமும் அல்ல!! இந்தியா என்பதும் ஒரு தேசமல்ல!!! இந்தியா என்ற பெயர் ஒரு உபகண்டத்திற்குச் சூட்டப்பட்டிருக்கும் பெயரேயாகும்; ஹிந்து என்பதும் ஒரு மதமல்ல! ஹிந்து மதம் என்ற பெயரும் தமிழிலாவது, வடமொழியிலாவது உள்ள எத்தகைய நூல்களிலோ! அல்லது வேதப் புத்தகங்களிலோ!! எதிலுமே காணமுடியாது.

சிந்து நதிக் கரைப்பிரதேசங்களில் வந்து குடியேறிய ஆரியர்களை அவர்களுக்குப் பிறகு அங்கு வந்த பாரசீகர்களும், கிரேக்கர்களும் பாரசீக மொழியில் 'ஹிந்து' என்று பெயரிட்டு அழைத்தனர்.

பாரசீக மொழி நூலில் (அகராதியில்) ஹிந்து என்ற பதம் காணப்படுகிறது; அதற்குக் கொள்ளைக் கூட்டத்தவன், திருடன், இழிமகன் என்றெல்லாம் வியாக்கியானங்கள் கூறப்பட்டுள்ளன. ஆகவே, ஹிந்து என்ற பதம் ஒரு மதத்தைக் குறிக்கும் பெயரல்ல வென்பது தெளிவாக விளங்கும்.

ஆரியர்கள் சிந்து நதிப்பிரதேசங்களில் நிலைத்து வலுப்பெறவும், பூர்வ குடிகளாகிய திராவிடர்களை அடக்கி ஒடுக்கித் தங்களுக்குக் கீழ்படிந்து வாழச் செய்தபோது ஆரியர் அவ்வடிமைத் திராவிடர்களுக் குத் 'தாசர்கள்' என்று பெயரிட்டனர்; மேலும், ஆரியர்கள் திராவிட நாட்டின்மீது படையெடுத்து வந்தபோது திராவிடர்களை 'வானரர்' என்றும் பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். அது போலவே, பாரசீகர்களும், கிரேக்கர்களும் ஆரியர்களையும், அவர் களுடைய தாசர்களையும் அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்தி அவ்வடிமைகளுக்கு 'ஹிந்துக்கள்' என்று பெயரிட்டு அழைத்திருக்கின்றனர். எனவே, தாசர், வானரர், ஹிந்து என்ற இம்மூன்று பதங்களும் வசைமொழிகளேயன்றி ஒரு இனத்தையோ, மதத் தையோ குறிக்கும் சிறப்புப் பெயர்களல்லவென்று மிகவும் உறுதியாகத் தீர்மானிக்கலாம்! இக்கருத்தில் ஒன்றை, 1928-ம் ஆண்டில் பண்டித ஜவஹர்லால் நேரு தன்னுடைய மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களில் வலியுறுத்திக் கூறி இருக்கிறார். அவ ருடைய கூற்றில் மிகவும் முக்கியமானவை:

'......இதிகாச காலத்தில் ஆரியர்கள் விந்திய மலைக்கு வடக்கே இந்தியா முழுவதும் பரவியிருந் தனர். தென்னிந்தியாவில், வானரர்களின் தலைவ னை அனுமான் ஸ்ரீராமனுக்கு உதவி செய்ததாக ராமாயணம் கூறுகிறது. உண்மையை உரைக்கு மிடத்து ராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்துச் சென்ற போது அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டை யைப் பற்றிக் கூறுகிறதென்று சொல்லலாம். திரா

விடர்களில் ஒரு வகுப்பினரையே வானரர்கள் என்று அழைத்தார்கள்......'

இனி, நாம் யார்? என்பதையும், பண்டித ஜவஹர்லால் நேரு அவருடைய மகளுக்கு எழுதிய மற்றக் கடிதங்களில் குறித்திருக்கிறார். அவைகளில் சில வாக்கியங்களைக் கவனிப்பதும் இந்தச் சமயத்தில் மிகவும் பொருத்தமாகவே இருக்கும். அவைகளாவன :

'......இப்போதுகூட தமிழகத்தில் வசிப்போரில் பெரும்பாலோர் திராவிடரே. அவர்கள் வடக்கத்தியரைவிட நிறத்தில் கறுப்பு, அதன் காரணம், திராவிடர்கள் இந்தியாவில் அதிகக் காலமாகவே வசித்து வந்தனர் என்பதே! திராவிடர்கள் அதிகம் முன்னேற்றம் அடைந்திருந்தனர்; அவர்கள் தம் மொழியையே பேசி வந்தனர். பிற தேசத்தாரோடு ஏராளமாக வியாபாரம் செய்தனர்.'

'......அக்காலத்தில் இந்தியாவில் வசித்தவர்களுக்கு திராவிடர்கள் என்று பெயர் சென்னையைச் சுற்றி வசிக்கும் மக்கள் எல்லோரும் இத்திராவிடரின் சந்ததிகளே ஆவார்கள்......'

ஆம், **நாம் திராவிடர்கள்! நமது நாடு திராவிட நாடு!! நமது மார்க்கம் (மதம்) சன்மார்க்கம்!!!**

'ஒன்றே குலம், ஒருவனே தலைவன்.' இவ்வளவே தான் நமது முன்னோர்களுடைய மதக் கோட்பாடு! இந்த உண்மையைத் தெளிவாக உணர வேண்டுமானால் நமது முன்னோர்களாகிய திராவிடர்

களின் பூர்வோத்தரத்தை ஆராய்ந்தறிய வேண்டும்; நமது முன்னோர்கள் எழுதி வைத்த ஏடுகளாகிய நிகண்டு முதலிய சங்க நூல்களே ஆராய்ச்சிக்குரிய முக்கிய சாதனங்களாகும். அவைகளைப் படித்து ஆராய்வோமாயின் பின் வருகிற விவரங்கள் தெற்றன விளங்கும்.

வடநாட்டின்கண் காசி மடத்திலிருந்த வடநூல் லவர்களில் ஒருவனாகிய அகத்தியன் அப்புலவர் களைப் பிரிந்து திராவிட நாட்டிற்கு வந்தபோது திராவிட மொழியாகிய தமிழைத் தீவிரமாகப் பயின்று தேர்ச்சி யடைந்தமையால்; பஃறுளியாற்றின் கரையில் பாண்டியன் நிறுவிய தலைச் சங்கத்தில் (இப்பெரும் நிலப்பரப்பு திராவிடத்தின் ஒரு பகுதியாக இருந்து பிறகு இந்து மா கடலில் மூழ்கிவிட்டது.) அவ்வகத்தியன் தலைமைப் புலவனாக விளங்கித் தமிழ் இலக்கணம் வளர்ச்சி யடையுமாறு செய்திருக்கிறான்.

அகத்தியன் காலத்திற்கு முன்பே திராவிடத்தில் நானூறு பழமொழிகள் தோன்றிக் கடைச் சங்கத்தார் காலம் வரையில் மாற்றமில்லாது நிலைத்திருந்தன; பிறகே அவைகள் பதினாயிரக் கணக்கில் பெருகி முரண் பாடான கருத்துக்கள் ஏற்று இன்றும் விளங்குகின்றன.

ஆகவே, திராவிடர்களுடைய பூர்வீகத்தை அறிய நெடுங் காலத்திற்கு முன் வழங்கிய பழமொழிகளையும், ஆராய்ந்து பார்க்க வேண்டும். பண்டைப்

பழமொழிகளை உவமையாகக் கூறும் தண்டலையார் சதகம், கோவிந்த சதகம் முதலிய நூல்கள் உண்டாகி நெடுங்காலமாகவில்லை ; கம்பராமாயணம் முதலிய வற்றில் உவமையாகக் கூறப்படும் பண்டைப் பழ மொழிகள் சிற்சிலவேயாம். கடைச் சங்கத்தார் காலத்தில் நாலடி முதலியவற்றிலும் மிகச் சில பழமொழிகளே காணப்படுகின்றன. ஆனல், முன் றுறையரையனர் இயற்றிய பழமொழி ஒன்றே கடைச் சங்கத்தார் காலம் வரையில் வழங்கிய பண்டைப் பழமொழிகள் நானூற்றையும் கொண் டுள்ளதாக இருக்கிறது.

அந் நானூறு பழமொழிகளைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தாலும் அவற்றில் மத சம்பந்த மான பழமொழிகளைக் காண்பதே அரிதாகும். அது போலவே அவற்றில் ஐந்தாறு வடசொற்கள் கலந் திருப்பதுவும் அரிதேயாகும்.

'கண்ணிற் கண்டதூஉ மெண்ணிச் சொல்லல்.' என்பதே திராவிடர் கொள்கையாதலினல், கண்ணுற் காணுததைக் கண்டவர்போல் கற்பனை செய்துங் கூருர். நரகத்தையோ, சுவர்க்கத்தையோ திரா விடர் அறியார் ; அறிந்ததாக அவர்களுடைய பண் டைய மொழிகள் ஒன்றிலேனுமில்லை. ஆனல், 'தனக்கின்னு வின்னு பிறர்க்கு' என்றறிந்திருந்தனர் ஆதலின் எவருக்கும் தீங்கு செய்தறியார்.

'ஒழுக்கத்தின் மிக்க உயர்வில்லை' என்பதுணர்ந் திருந்த நமது முன்னேர்களாகிய திராவிடர்களின்

சமுதாய வாழ்க்கை மிகவும் உன்னதமான முறையில் விளங்கியதாகும்; அவர்கள் மிகவும் சிறப்பாக உழவுத் தொழில் புரிந்து கூட்டுறவு கொண்ட பொதுவுடமை போன்ற வாழ்க்கை முறைகளையே அமைத்து மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

மச்சு வீடு கட்டவும், கிணறு தோண்டி இறைக்கவும், மண் பாண்டங்கள் செய்யவும், மரச்சாமான்கள் செய்யவும், தெரிந்திருந்தனர்; நூல் நூற்றல், துணி நெய்தல், சாயந் தோய்த்தல் முதலியனவும் அவர்கள் அறிந்தனவேயாம்; இரும்பு, வெள்ளி, பொன் முதலிய உலோகங்களையும் அவர்கள் அறிந்து அரம், முதலிய கருவிகளும், அணிவகைகளும் செய்திருக்கின்றனர். ஆனால், நவரத்தினங்களை அவர்கள் கண்டதில்லை. நோய்களுக்குத் தகுந்த மருந்து கண்டு பிடித்திருந்தனர். எனினும், மருத்துவச் சாலைகள் கட்டிக் கொள்ளவில்லை.

மூலதனம் போட்டு ஊதியம் பெறும் முறைகளும் அறிந்திருந்தனர். 'வருந்தாதார் வாழ்க்கை திருந்துதலின்று' என்ற அவர்களுடைய முதுரைக்கிணங்க அவர்கள் முயற்சி யுடையவர்களாகவே வாழ்ந்து வந்தனர்.

நெடுங்கணக்கும், சுவடியும் அவர்களிடம் இருந்தன; ஆனல், சோதிட சாத்திரமெதுவும் அவர்களிடம் இருந்ததில்லை; நமது முன்னேர்களிடத்தில் சாதி, குலம் முதலிய பிரிவுகளோ, பேதங்களோ அறவே கிடையாது.

அரசன் போன்று திராவிடர் தலைவன் விளங்கினான்; ஆனால், அவனுக்கு ஒரு அமைச்சன் இல்லை; குடிகளெல்லோருமே அமைச்சர்கள்போல் விளங்கினர்; கட்டுப்பாடு, ஒழுக்கம், ஒற்றுமை முதலிய நற்குணங்களோடு தலைவனுக்குக் கீழ்படிந்து அவனை கௌரவப்படுத்தும் உயர்ந்த பண்புடையவர்களாகிச் சுகவாழ்வு வாழ்ந்தனர். வில், அம்பு, வேல், வாள், ஈட்டி முதலிய ஆயுதங்களும், படைகளும் வைத்திருந்தனர்.

தோணி, படகு, தெப்பம், கட்டுமரம் முதலியவற்றின் மீதேறிக் கடல் கடந்து செல்லும் பழக்கமும் உடையவர்களாய் இருந்தனர்; ஆனால், அவர்களிடம் கப்பலிருந்ததில்லை.

குப்பம், பாக்கம், ஊர், பட்டினம் என்று அமைத்திருந்தனர்; ஆனால், கிராமம், நகரம் என்ற பேதம் அறியார்.

2. சங்க இலக்கியச் சான்றுகள்

அந்தக் காலத்தில் திராவிட நாட்டுடன் வர்த்தக சம்பந்தம் உள்ளவர்களில் யவனர், (கிரேக்கர்) ரோமர் முதலானவர்களின் கொள்வினை, கொடுப்பினை பற்றிச் சங்க இலக்கியங்களில் தெளிவாகக் குறித்திருப்பதைக் காணலாம். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கிரேக்கரையும், ரோமரையும் பொதுவாக யவனரென்றே வழங்குவது வழக்கமாக இருந்திருக்கிறது.

அக்காலத்தில் ரோமரால் வெற்றி கொள்ளப் பட்ட எகிப்து தேசவாசிகளாகக் கிரேக்கர்கள் விளங் கினர்; கிரேக்கர்கள் தங்கள் மரக்கலங்களில் சாராயம், பித்தளை, ஈயம், கண்ணாடி முதலியன கொண்டு வந்து திராவிட நாட்டில் விற்பனை செய்வ தும், அரிசி, மிளகு, தந்தம், முத்து, மெல்லிய ஆடை முதலியன கொள்வினை செய்துகொண்டு போவது மாக இருந்தனர். யவனர்கள் எனும் கிரேக்க, ரோம வீரர்கள் திராவிடத் தலைவர்களின் படைகளில் சேர்ந்து சேவை செய்ததாகவும் சங்க இலக்கியங் களில் காணலாம்.

ரோம் சாம்ராச்சியம் உச்ச நிலையடைவதற்கு முன்பே திராவிட சாம்ராச்சியம் (மிகப்பெரிய நிலப் பரப்பு) உச்சநிலை யடைந்திருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் போதிய சான்றுகள் காண்ப தெளிது.

சிலப்பதிகாரத்தில் 'நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண் புனனாடு' என்பதில் 'தொடியோள் பௌவம்' என் பதை அடியார்க்கு நல்லார் விளக்கிக் கூறும்போது, 'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடு கொடுங்கடல் கொள்ள.' என்னும் சிலப்பதி கார அடிகளை ஆதாரமாக வைத்துப் பின்வருமாறு கூறி யிருக்கிறார்' தலைச்சங்கம் இருந்த காலத்தில் பாண்டியனின் தென்பாலி முகத்திற்கு வட எல்லை யாகிய பஃறுளி ஆற்றுக்கும், குமரி ஆற்றுக்கும்

இடையே எழுநூறு காத தூரம் அவ்வாற்றின் நீர் பாய்ந்து செழிப்புற்று விளங்கிய ஏழு தெங்கநாடும், ஏழு மதுரை நாடும், ஏழு முன்பாலை நாடும், ஏழு பின்பாலை நாடும்' ஏழு குன்ற நாடும், ஏழு குண காரை நாடும், ஏழு குறும்பனை நாடும் கூடிய மொத்தம் நாடுகள் நாற்பத்தொன்பதையும், குமரி கொல்லம் முதலிய பன்மலை நாட்டையும், காட்டையும், நதியையும், பதியையும், தடநீர்க் குமரி வட பெரும் மலையையும் கடல் பொங்கி அழித்து விட்டதால் 'வட வேங்கிடம், தென் குமரியாயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' சிதைந்து குறுகிவிட்டது. என்று விவரித்திருக்கிறார்.

இயற்கையின் தாக்குதலால் திராவிட சாம்ராச்சியம் சிதைவதற்கு முன்பே, அகத்தியனைத் தொடர்ந்து வந்த ஆரியரின் சூழ்ச்சியால் திராவிடரின் உயரிய தமிழ்ப்பண்பு சிதைந்துவிட்டது. மித்துரு பாந்தத்துவம் கொண்டாடிக் குடிபுகுந்த ஆரியர் திராவிடர்களுக்குச் சில கற்றுக் கொடுத்தும், திராவிடர்களிடமிருந்து பல கற்றும் திராவிடர் மொழியாகிய தமிழையே பேசுவாராகிப் பிறகு, அம்மொழியையே சிதைத்துத் தமது சமஸ்கிருதச் சொற்களை இயன்ற அளவுக்குப் புகுத்தி, மலையாள மொழி என்றும், கன்னடமொழி என்றும், தெலுங்கு மொழி என்றும், துளுவ மொழி என்றும் பலவாறுகப் பிளவுபடுத்தி விட்டனர்; இதுபற்றியே, சமீப காலத்திலிருந்த ஆங்கிலக் கலா நிபுணரான திருவனந்தபுரம், சுந்தரம் பிள்ளையும் அவருடைய பாடல்

களில் பின்வரும் கருத்துக்களைப் பொறித்துள்ளார் போலும்!

"...
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்
தமிழணங்கே.

....
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந்
துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே"

ஆகவே, ஆரியர்கள் தமிழ் மொழியைச் சிதைத்த தோடல்லாமல், ஆரியர் தமது மூடமதக் கோட்பாடு களையும் சிதைந்த தமிழ் மொழிகளோடு சிறுகச் சிறுகக் கலந்தூட்டி வந்தனர். நாளடைவில் ஆரியர், திராவிடர்களுக்கு மத சம்பந்தமான சரியை கிரியை என்ற கற்பனைக்கூற்றுகளைக் கற்பிக்கும் குருமார்களாகவும் ஆகியதன்மூலம் வயிற்றுப் பிழைப்புக்கும் வழி தேடிக் கொண்டனர்.

பிறகு, திராவிடர்களின் மொழிகளில், ஆரியத் தேவதைகளின் பெயர்களாகிய விஷ்ணு, சிவன், பிரமன், இந்திரன் முதலிய வடமொழிப் பெயர்களுக்குத் தகுந்தாற்போல் பரம்பொருள், கடவுள், இறைவன், வானவர்கோன் என்ற பதங்களை உற்பத்தி செய்த

னர் ; அவ்வாறே, பூஜை, ஆராதனை, நிவேதனம், உற்சவம், அபிஷேகம், பலி, என்ற வடமொழிச் சொற்களைத் தமிழில் கும்பிடுதல், வணங்குதல், தொழுதல், திருவிழா, திருமுழுக்கு, காவு, என்று மொழிபெயர்த்துக் கொண்டனர் ;

பிராணன், ஆத்மா என்ற வடமொழிக் கற்பனைக் கூற்றுகளுக்கு உயிர், ஆவி என்ற தமிழ்ச் சொற்களைத் தோதாக்கிக்கொண்டனர்; புரோகிதர், பூசாரி, அர்ச்சகர், விக்கிரகம் முதலிய முழுமோசடியான வட சொற்களுக்குத் தகுந்தாற்போல் மொழி பெயர்க்கக் கூடிய அவ்வளவு அநாகரீகமான செய்கையைக் குறிக்கும் தமிழ் பதம் எதுவும் தமிழ் மொழியிலேயே இல்லாமையால் அன்றோ! இன்று வரையில் அந்த அநாகரீகமான வடசொற்கள் அப்படியே தமிழில் கலக்க முடியாமல் தனித்தே நின்று விட்டன !

3. மனு நீதி தர்ம சாஸ்திரம்

வயிற்றுப் பிழைப்பிற்காக மதக் குருக்களாய்த் தோன்றிய ஆரியர்கள், தங்கள் சுகவாழ்விற்குரிய திட்டங்களை மிகவும் தீவிரமாகத் தீட்ட ஆரம்பித்தனர்; அவைதான் அன்று 'மனுநீதி தர்ம சாஸ்திரம்' என்ற பெயருடைய வேதப் புத்தகங்களாகவும், திராவிடத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சட்டப் புத்தகங்களாகவும் பரிணமிக்கும் சூழ்ச்சி செய்யப் பட்டிருக்கின்றன.

'பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் நான்கு வகையான சாதிப் பிரிவுகள் உண்டென்பதும், அவற்றில் ஆரியரே மற்றெல்லாச் சாதிகளிலும் உயர்ந்தவர்களென்பதும், ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு விதமான நீதி வழங்க வேண்டுமென்பதும்; ஆரியர்கள் கொடிய குற்றம் செய்தாலும் (கடுமையாகத்) தண்டிக்கக் கூடாதென்பதும், திராவிடர்களில் நான்காவது பிரிவினராகிய சூத்திரச் சாதி மக்கள் சிறிய குற்றம் செய்தாலும் கொடிய தண்டனை கொடுக்க வேண்டும் என்பதும், கடுமையான உழைப்புகளெல்லாம் ஆரியரைத் தவிரத் திராவிடர்களே அவரவர்கள் சாதிப் பிரிவுக்குத் தகுந்தபடி செய்து கொள்ள வேண்டும்; ஆரியர்கள் உழைக்காவிட்டாலும் அவர்கள் கோரும் பொருள்கள் எதையும் திராவிடர் தலைவனோ! மக்களோ! கொடுப்பதற்கு ஒருபோதும் மறுக்கவே கூடாது!' 'என்பவைகளே தான் அந்த மனு நீதி தர்ம சாஸ்திரத்தின் சுருக்கமான கோட்பாடுகளாகும்.

அதை உணர்ந்தே ஒரு திராவிடப் புலவர்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி"

என்று பாடி விட்டார் போலும்!

அந்தக் காலத்துத் திராவிடர் தலைவனை ஆரியக் குருக்கள் முகமன் கூறித் துதித்து, 'ஓ! திராவிட பூபதியே!! நீரே விஷ்ணுப் ப்ருதிபதி!!! தெய்வாம்சம் பெற்றுப் பிரகாசிக்கிறீர்! விஷ்ணுவின் அவதார

புருஷரே! கேளும்! பிராமணர்களாகிய நாங்களும் தெய்வத்தின் பிரதிநிதிகளாவோம் என்று, மனுநீதி தர்ம சாஸ்திரம் முழங்குகின்றது; ஆதலால், நாங்கள் உமது ராஜக் குருக்களாக இருந்து உம்மை ஆசீர்வதித்து உமது ராஜாங்கம் கீர்த்தியடைவதற்குரிய ஆலோசனைகள் சொல்வோம்! யாகங்களும், யோகங்களும் புரிந்து பிரஜைகளுக்குச் சேமம் உண்டாகச் செய்வோம்! நீர் உடனே விஷ்ணுவின் கடாட்சத்தால் தோன்றிய வேதமாகிய மனு நீதி தர்ம சாஸ்திரத்தை மனப்பூர்வமாக ஏற்று இன்று முதல் உமது ராஜாங்கச் சட்டதிட்டங்களாகப் பாவித்து அதன்படி செங்கோல் செலுத்துவீராக!' என்று உபதேசித்துள்ளனர்.

ஆரியர்களின் நயவஞ்சகமான போதனைகளையும், அநீதியான மனு நீதி தர்மசாஸ்திரத்தின் உட்கருத்துக்களையும் பகுத்தறிய முடியாத நிலைமையில் கள்ளங்கபடமற்ற வாழ்க்கையையே நடத்திப் பழகிய திராவிடர் தலைவரும், திராவிடர்களும் நாளடைவில் ஆரியர் சாஸ்திரத்தை முழு மனதுடன் நம்பி அதன்படி ஆட்சி முறைகளையும் மாற்றி அமைத்துக் கொண்டனர். அதன்பிறகே திராவிடர்களின் பண்டைக் காலக் கூட்டுறவு வாழ்க்கை முறைகள் சிதைந்து, தனிவுடைமைப் பித்தும், சுயநலப் பேராவலும், சூதும் நிறைந்த பிணக்கங்கள் தோன்றித் திராவிடர் வாழ்க்கையை ஓர் கோரப் போராட்டமாகச் செய்துவிட்டது.

ஆரியர்களின் மனு நீதி தர்ம சாஸ்திரப்படி வியா பார உரிமையை ஒரு சிறு கூட்டமாகிய வைசியச் சாதிகள் மட்டும் கைப்பற்றிக் கொண்டமையால், அன்று முதலே திராவிடத்தில் முதலாளித்துவம் என்ற ஒரு பிரச்னை தோன்ற ஆரம்பித்து விட்டது.

திராவிட நாடெங்கும் வைசியர்கள் சிறுசிறு கூட்டங்களாகத் தனித்தனியே தோன்றி வியாபாரப் போட்டிகள் நடத்தி அதில் பொய், புரட்டு, பித்த லாட்டங்கள் முதலிய கெட்ட குணங்களெல்லாம் கற்றுக் கொண்டனர். அவர்கள் தம் உள்ள மெல் லாம் கள்ளமே உருவாகச் செய்து கொண்டு, உருவ மெல்லாம் தெய்வமாகப் பாவித்தனர். இத்தகைய மனப்பான்மை அவர்களுக்குதித்த காரணம், அவர் களுடைய அடிமைகளாக விளங்கிய சூத்திரத் திரா விடர்களை ஏமாற்றி என்றென்றும் பாமரத் தன்மை யில் வைத்து அடக்கி ஒடுக்கிப் பயமுறுத்திக் கொண் டிருந்தாலொழிய, ஆரியர்களிடமிருந்து கற்றுக் கொண்ட பித்தலாட்டகரமான வித்தைகளெல்லாம் பயனற்றுப் போய்விடும் என்று வைசியத் திராவிடர் கள் நினைத்ததேயாகும்.

ஆகவேதான், சூத்திரத் திராவிடர்களுக்குக் காட்டேறி, பேய், பூவாடைக்காரி, முருகன் என்றெல் லாம் சில்லரைத் தெய்வங்களைக் கற்பனை செய்து கூறி, அவைகள் மிகவும் துடியான துஷ்ட தேவதை கள், அவைகளுக்கு அடங்கி நடக்கா விட்டாலோ! அவைகளுடைய சட்டதிட்டங்களாகிய குல தர்மங் களை (பாமரத் தன்மைகளை) பக்தியோடு அனுசரித்து

நடந்து கொள்ளாவிட்டாலோ! அந்தத் தேவதைகளுக்கு அடங்காக் கோபம் உண்டாகி ஒரு நொடியில் உங்களையும், உங்கள் குழந்தை குட்டிகளையும் கொன்று அழித்து நாசமாக்கி விடும் என்றும், கொடிய வியாதிகளையும், அபாயங்களையும் ஏவிக் கடுமையாகத் தண்டிக்கும் என்றும் பயங்காட்டிச் சூத்திரத் திராவிடர்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு வைசியத் திராவிடர்கள் முட்டுக்கட்டை போட்டு அவர்கள் எவ்வகையிலும் ஒரு சிறிதும் முன்னேற்றம் அடைந்து விடாதபடி மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

நீர்வளமும், நிலவளமும் இயற்கையிலேயே மிகவும் நிறைந்து செழித்துள்ள திராவிட நாட்டின் செல்வங்களைச் சூத்திரர்களின் உழைப்பால் சேகரித்து, வட இந்தியாவோடும், எகிப்து, மெசப்பட்டோமியா, பாரசீகம், சீனம், சாவகம், கடாரம், (பர்மா) மலேயா முதலிய கடல் கடந்த நாடுகளோடும் வைசியர் ஏராளமாக வியாபாரம் செய்து திரட்டிய பெருநிதிக் குவியல்களை ஆரியர்கள் அவ்வப்போது அவரவர்களிடம் சென்று தானமென்றும், தருமமென்றும், பூஜைக்கென்றும், உற்சவத்திற்கென்றும் ஓயாது உறிஞ்சிக் கொண்டே இருந்ததால் வைசியர்களும் நிரந்தரமான முதலாளிகளாக இருந்ததில்லை; சூத்திரர்களும் உழைப்பிற்குத் தகுந்த கூலியோ! ஓய்வோ! அந்தக்காலமுதலே அடைந்தவர்களாயில்லை.

திராவிட மன்னர்களாகிய சத்திரியர்களோ! விஷ்ணுப் ப்ரதிபதிகளோ!—கூட நிம்மதியாக

ஆளவோ! வாழவோ! ஆரியர்கள் அனுமதித்ததே இல்லை. திராவிட மன்னர்களை 'அஸ்வமேதம்' என்னும் ஏகாதிபத்திய சாம்ராச்சிய அமைப்பு யாகம் அடிக்கடி நடத்தும்படி ஆரியர்கள் தூண்டினர். அதனால் திராவிட மன்னர்கள் ஒருவருக் கொருவர் யுத்தம் செய்வதையே தொழிலாகக் கொண்டு தொலைக்கும் நிதியில் மிச்ச மிருந்தாலும் அல்லது ஒருவர் நாட்டை ஒருவர் கொள்ளையடித்ததால் கிடைத்த திரண்ட நிதிக்குவியலிருந்தாலும், புதுப்புதுக் கோவில்கள் கட்டுவதற்கும், கும்பாபிஷேகம் நடத்துவதற்கும், கட்டிய கோவில்களுக்கும், இனிக்கட்டப் போகும் கோவில்களுக்கும் மானியங்களும், தானியங்களும், அணிகளும், ஆடைகளும், தேர்களும், வாகனங்களும் செய்து கொடுத்ததுபோக மேலும் மிச்சப்பட்டால் யாகங்களின் பேரால் நெருப்புக் குழியிலாவது கொட்டி எரித்து நாசம் செய்தாலொழிய ஆரியர்களும் நிம்மதியாக இருந்ததே இல்லை.

4. முதலாளி தத்துவம்

இவ்வளவு நாசவேலைகளுக்குப் பிறகு, மக்களின் வாழ்க்கை வசதிக்குரிய பொருள்களோ! மன்னர்களின் இராச்சிய பரிபாலனத்துக்குரிய செல்வமோ!! போதிய அளவு சேமிப்பில்லாமையால் பாட்டாளி மக்களாகிய சூத்திரத் திராவிடர்கள் ஓய்வென்பதே இல்லாமல் காலமெல்லாம் மிருகங்களைப் போல் உழைத்துக் கொண்டே இருந்ததுதான் அவர்கள் கண்ட பலன்!

உணவுப் பொருள்களை நாசம் செய்வதுதான் முதலாளித்துவத்தின் அடிப்படையான கொள்கைகளில் முக்கியமான திட்டமாகும். இக்கருத்தை ஆரியர்கள் அந்தக் காலத்திலேயே வைசியத் திராவிடர்களின் உள்ளத்திலும், சத்திரியத் திராவிடர்களின் உள்ளத்திலும் நன்கு பதிய வைத்துவிட்டனர்; பாட்டாளி மக்களை எப்பொழுதும் பட்டினிக் கவலையில் ஆழ்த்திவைத்துக் கொண்டிருக்கவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கும் ஊதியம் அவர்களுடைய உணவு, உடைகளுக்குக்கூடப் போதுமானதாக இருக்கக்கூடாது. ஆகையால், பொருள்களின் உற்பத்தி அதிகமாகப் பெருகிவிட்டால் உடனே யாகங்களைத் தொடங்கி நெருப்புக் குழிகளில் அவைகளைக் கொட்டி எரித்து நாசம் செய்துவிடவேண்டும். இன்றேல், பாட்டாளிகளாகிய சூத்திரத் திராவிடர்களுக்குப் பொருள்கள் மலிவாகக் கிடைத்துவிடும்! அதனால், ஊதியத்தில் மீதம் ஏற்படும்! உழைப்பும் குறையும்! ஓய்வும் கிடைத்துவிடும்! பிறகு அவர்களும் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால்! சாதி, குல ஆச்சாரமே அழிந்து போகும், எல்லோரும் சமமான நிலைமைக்கு வந்துவிடுவார்கள், அப்பால் உலகம் தாங்குமா? என்று மன்னனிடமும், முதலாளிகளிடமும் ஆரியர்கள் முறையிட்டனர்.

ஆரியர்கள் தங்களுடைய சுயநலத்திற்காகவே இங்ஙனம் முறையிடுகின்றனர் என்று மன்னனும், வைசியனும் எண்ணவில்லை. ஏனென்றால், மன்னனுடையவும், வைசியனுடையவுமாகிய சுய நலங்களும்

அந்தப் 'பிரச்னையிலேயே அடங்கி இருக்கின்றன அல்லவா? ஆம்! 'அமெரிக்காவிலுள்ள கொழுத்த முதலாளிகளின் முதலாளித்துவ முறைகளைச் சற்று இங்கு ஒப்பு நோக்கி ஆராய்வதும் பொருத்தமாகவே இருக்கலாம்!

கி. பி. 1920-ல் யாகக்குண்டம் உண்டாகக்கூடிய பக்குவ நிலைமையில் உலக நாகரீகம் குன்றி இருந்ததில்லை; ஆனால், உணவுப் பொருள்களை ஒழிப்பதின் மூலமேதான் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற முடியும் என்ற நிலைமை மட்டும் மாறினதே இல்லை. ஆகையால், எப்படியும் உணவுப் பஞ்சத்தை உண்டாக்காவிட்டால் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற முடியாது என்ற நிலைமை அமெரிக்காவில் ஏற்பட்டது. ஏனென்றால், உணவுப் பொருள்களின் உற்பத்தி மிகவும் பெருகி ஏழை மக்களும் மலிவாக வாங்கக்கூடிய அளவுக்குக் குவிந்துவிட்டன. இந்த நிலைமையைக் கண்ட பாட்டாளி மனம் மகிழ்ந்திருக்கலாம்! ஆனால் முதலாளிகளின் உள்ளங்களோ பாட்டாளி மக்களின் மகிழ்ச்சியை ஒழிப்பதற்கு உபாயம் தேடிக்கொண்டேயிருந்தன.

அவ்வாண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று வாஷிங்டன் நகரைவிட்டு 30 வண்டிகள் பூட்டிய ஒரு பெரிய புகைவண்டித் தொடர் புறப்பட்டு பொட்டோமாச் நதிக்கரைக்கு வந்து சேர்ந்ததும் அந்த 30 வண்டிகள் நிறைய இருந்த பூசனிக் காய்கள் அவ்வளவும் வீணே ஆற்றில் எடுத்தெறியப்பட்டன;

அதே வருடத்தில் அமெரிக்காவில் உள்ள இல்லிநொய்ஸ் மலை இடுக்குகளில் பல்லாயிரக் கணக்கான காலன்கள் அளவுள்ள பால் வீணுகக் கொட்டிவிடப்பட்டன. 1921-அக்டோபர் மாதத்தில் நடுமத்திய தேசங்களின் பெரும்வழிகளிலே, "விவசாயிகளே! கரிக்குப் பதிலாகத் தானியங்களையே எரியுங்கள்" என்ற விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

1924-ஜூன் *24*-ந்தேதியன்று நியூயார்க்கிலிருந்து வெளியான 'ஹெரல்டு' எனும் பத்திரிகையில் 'ஆயிரக் கணக்கானக் காய்கறி மூட்டைகள் இன்று துறை முகத்தில் குப்பையோடு எறியப்பட்டன' என்ற செய்தி யொன்று வெளி வந்தது.

சிற்சில ஆண்டுகளுக் கொரு முறை மெயின் பிர தேசத்திலுள்ள உருளைக்கிழங்குகளில் பெரும்பகுதி யும் எடுக்கப்படாமல் மண்ணிலேயே மடிந்து போகும் படி விட்டு விடப்பட்டன.

மலைத் தேசங்களில் உள்ள பருத்திப் பயிர் செய் யப்படும் இடங்களில் பருத்தியை அழிக்கக்கூடிய ஒரு வித வண்டை வளர்த்திருக்கிறார்கள்.

மோட்டார் செய்யும் முதலாளிகள், முதலில் விற்பனை செய்து ஓடிக்கொண்டிருக்கும் நல்ல மோட் டார்களைக்கூட அவர்களே விலைக்கு வாங்கி அவை களை உடைத்துத் தூளாக்கிக் கொண்டிருக்கின்றனர்! நீராவிக் கப்பல் செய்யும் முதலாளிகளும் நூற்றுக் கணக்கான புதிய கப்பல்களைக்கூட உடைத்தெறிந்

திருக்கிறார்கள்! இதற்கெல்லாம் காரணம் என்ன? முதலாளிகளுக்கு மூளை கலங்கி விட்டதா? இல்லை இல்லை! முதலாளிகளின் துரோகப் புத்தியேயாகும்.

விளைவை விறகாக்குவதும், பாலைக் கொட்டுவதும், காய்கறிகளை அழிப்பதும், மோட்டார்களை உடைப்பதும், கப்பல்களை தகர்ப்பதும், முதலாளிகளின் பயித்தியக்காரத்தனமான செய்கைகளல்ல! தானியங்களின் விலையை உயர்த்த வேண்டுமானால், பல வண்டிக்கணக்கான தானியங்களை எரித்து நாசம் செய்து தானியப்பஞ்சம் உண்டாக்கி விட்டால் தானியங்களின் விலை உயராமலிருக்க முடியுமா?

அமெரிக்க முதலாளிகள் பத்தொன்பதாவது நூற்றாண்டுக்குப் பிறகு கண்டு பிடித்த கபடச் செயல்களையே ஆரியர்கள் யாகங்களின் பேரால் ஆதிகாலத்திலிருந்தே திராவிட நாடு முழுவதும் நடத்திக் கொண்டிருந்தனர்.

5. இராவணன் யார்?

அத்தகைய துரோகச் செயலை உணர்ந்து உள்ளங் குமுறி, உடனே தடுத்து நிறுத்தியதோடு, திருட்டுத்தனமாகத் திராவிட நாட்டில் யாகம் செய்யும் கபடர்களைக் கண்டு பிடித்து உடனுக்குடன் தண்டனை விதிக்கும் உண்மையான உயர்குணம் உடையவனாகவும், பகுத்தறிவிலும், பற்பல கலைகளிலும் தேர்ச்சி மிக்க வீரத்திராவிட மன்னனாகவும் ஒருவன்

அந்தக் காலத்தில் தோன்றினன்; அவன் "ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன்! குன்றெடுக்கும் பெருந்தோளான், கொடை கொடுக்கும் கையான்! குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம்! என் திராவிடர் மூதாதை! என் திராவிடர் பெருமான்! (இலங்கையைத் தலை நகராகக் கொண்டு திராவிட நாட்டை ஆண்ட) இராவணன்காண்! அவன் நாமம் இவ்வுலகம் அறியுமே!" என்று புரட்சிக் கவிஞர் போற்றுவது போன்று புகழத் தகுந்த இராவணனெனும் சிறந்த திராவிட மன்னனே யாவான்! இராவணன் ஆரியர்களுடைய யாகச் செயல்களை அறவே நிறுத்தியதோடு, பண்டைத் திராவிடர்களின் சிறந்த கூட்டுறவு வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து அதன்படி தனது இராச்சிய பரிபாலனத்தைத் திருத்தி அமைத்துக்கொண்டான். எனவே ஆரியர்களுடைய சாதி பேதங் கற்பிக்கும் மனுநீதி தர்ம சாஸ்திரம் முதலியவைகளை எடுத்தெறிந்து விட்டுத் திராவிடர்களைப் போலவே ஆரியர்களும் உழைத்துத்தான் வாழ வேண்டுமென்று ஆக்கினை பிறப்பித்தான். அதனுல், வெருண்டோடிய ஆரியர்கள் சிலர், அயோத்தியை ஆண்ட ஆரிய அரசன் இராமனிடம் தங்கள் நிலைமையை முறையிட்டு இராமனைத் திராவிட நாட்டின் மீது படை எடுத்து வரச் செய்தனர்.

திராவிட நாட்டில் உள்ள ஆரியர்கள் அந்தச் சமயத்தில் ஐந்தாம் படையைப்போல், இராவணன் ஆட்சி முறைகளைக் குறைகூறி அந்தரங்கமாகப் பிரச்

சாரம் செய்து கொண்டிருந்தனர். முதன் முதல் இராவணன் தம்பி விபீஷணனே ஐந்தாம் படையினராகிய ஆரியர் வலையில் வீழ்ந்தான். பிறகு இன்று வரையில் பண்டித ஜவஹர்லால் நேரு கூறியது போல் தென்னாட்டுக் குரங்குகளென்று இகழப்படும் திராவிடர்களின் ஒரு கூட்டத்தாரும் ஐந்தாம் படையின் வலையில் சிக்கிக் கொண்டனர்.

ஆங்கிலேய வீரனாகிய கிளைவேனும் ஆற்காட்டு நவாபுகளாகிய முகமதலிக்காகச் சந்தாசாகிபைத் திருச்சினாப்பள்ளி முற்றுகையின்போது நேருக்கு நேர் எதிர்த்து நின்று யுத்தம் செய்து கொன்றுவிட்டு முகமதலிக்கு முடிசூட்டினான்.

ஆரிய அரசனாகிய இராமனோ! கோழைத்தனமாக மறைந்து நின்று திராவிடச் சிற்றரசர்களில் ஒருவனாகிய வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு முடி சூட்டி அவனுடைய சேனைகளின் உதவியைக் கோரிப் பெற்றான். முடிவில் வஞ்சக விடீஷணனை இராமன் இரகசியமாக வரவழைத்து இலங்கையைக் கைப்பற்றும் முன்பே இலங்காதிபதியாக விபீஷணனுக்கு முடிசூட்டி ஆசைகாட்டி அவனை ஆரியத்தின் அசைக்க முடியாத அடிமையாக்கிப் பிறகு, அது போன்ற சூழ்ச்சிப்போர் முறைகளினாலும், துரோகிகளின் துணையினாலுமே இராமன் வென்றான்; சூதே அறியாத இராவணன் சுத்த வீரனாகவே யுத்த களத்திலே செத்து மடிந்தான்.

'தன் இனத்தினைத் தூக்கிடும் தாம்பெனச் சகம் சிரிக்கப் பிறந்த விபீஷணன்' இலங்கையின் அரச

ளுக்கப்பட்டான். மீண்டும், மனுநீதி தர்ம சாஸ்திரச் சட்டங்கள் புத்துயிர் பெற்றன. ஆரியர் அகம் மகிழ்ந்தனர். திராவிட மக்களோ! சாதிப் பிரிவால் பிளவுபட்டனர்; சூத்திரத் திராவிடரெனும் பாட்டாளி மக்களுக்கோ!! சூழ்ந்தது பெருங் கேடுகள்.

இராவணனுக்குப் பிறகு, தன்மான உணர்ச்சியுற்றுப் பண்டைத் திராவிடர் ஆட்சியின் பண்பை உணர்ந்து, தம் ஆட்சி முறைகளைப் புரட்சிகரமான மாறுதலுடன் தீவிரமாகச் சீர்திருத்தி அமைத்து ஆரியம் அழிந்தொழியத் தக்கவிதமாக ஆட்சிபுரிந்த, இரணியன் முதலான சிறந்த இனஎழுச்சியுற்ற திராவிட மன்னர்களையும், ஆரியர்தம் பரம்பரைப்போர் முறையாகிய (ஐந்தாம் படை)த் துர்ப்பிரச்சாரங்களின் மூலம் அரக்கர், அசுரர், இராட்சதர், நாத்திகர் என்று பழித்துக்கூறிப் பாமர மக்களையும் நம்பும்படிச் செய்தனர். இதனால், எத்தகைய சூத்திரத் திராவிட மக்களின் இழிவைப் போக்கும் வகையில் ஆட்சி புரிந்தனரோ! அந்த மன்னர்கள், அத்தகைய இழி நிலையிலுள்ள மக்களாலேயே வெறுக்கப்பட்டனர்! சுற்றத்தாரால் காட்டிக் கொடுக்கப்பட்டனர்!! மகாவிஷ்ணுவினாலே கொல்லப்பட்டனர்!!! என்று கூறும் கதைகளை இன்றும் படிக்கிறோமல்லவா?

6. மூவேந்தர் நிலைமை?

பிற்காலத்தில் அத்தகைய கதைகளைப் படித்த திராவிட மன்னர்களாகிய மூவேந்தர் (சேர, சோழ,

பாண்டியர்)களும், அவர்களுடைய சந்ததிகளும் என்ன நினைத்திருப்பார்கள்?

ஆரியர்கள் புகுத்திய முழுமூட நம்பிக்கைகளை அழித்து, பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டும் சாதித்திமிரை ஒழித்து, குலத்துக்கொரு நீதி கூறும் மனுநீதி தர்ம சாஸ்திரச் சட்டங்களைக் கொளுத்தி விட்டுப் பண்டைத் திராவிடர் மூதாதைகள் குறித்த குறிக்கோளாகிய 'ஒன்றே குலம் ஒருவனே தலைவன்' என்ற கொள்கையுடைய ஆட்சி முறையைத்தான், நம் ஆட்சியில் நிலைநாட்டவேண்டும் என்று மூவேந்தர் களில் ஒருவனேனும் நினைத்திருக்க முடியுமா? அப்படி நினைத்து, நினைத்தபடி நடத்தி இருந்தால்! அவன் மறுதினமே, அரக்கன், அசுரன், இராட்சதன், நாத்திகன் என்றபட்டங்கள் தாங்கிப் பழிசுமந்து பதி ஞேராவது விஷ்ணு அவதாரத்தால் நிக்கிரகம் செய் யப்பட்டதாக ஒரு கதையும் கட்டிவிடப்பட்டிருக் காதா? இன்று, அதைத் தன்மானம் இழந்ததால் கய மைத்தனம் குடிகொண்டு வாழும் தமிழன் (திராவி டன்) ஒரு திருவிழாவாகக் கொண்டாடிக் கொண் டிருக்கமாட்டானா?

திராவிட நாட்டில் தோன்றிய மூவேந்தர்களும் ஆரியத்தின் அநாகரீகமான பிடியில் சிக்கி மௌட் டீகமான வாழ்க்கையும், குருட்டுத்தனமான மூட நம்பிக்கையும், குறுகிய மனப்பான்மையும் கொண் டிருந்தனர் என்பதற்கு, அவர்கள் இன உணர்ச் சியோ! இன அரசுக்கரசு இயல்பாக ஏற்படும்

R34-
N47

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103850

பற்றே! ஒருசிறிதும் அற்றவர்களாய், அடிக்கடி ஒருவரோடொருவர் பொருமை ஒன்றே காரணமாகக்கொண்டு போர் புரிந்திருக்கின்றனர், போரில் கொள்ளையடித்த செல்வங்களையும், குடிகளிடம் சுரண்டிய பொருள்களையும், உழைப்பையும் விழலுக்கிறைப்பதுபோன்று, வானமளாவிய கோபுரங்களையுடைய கோவில்கள் கட்டுவதிலும், உபயோகமற்ற பெரிய தெப்பக் குளங்கள் வெட்டுவதிலும், ஆயிரம் கற்றூண்களுடைய மண்டபங்கள் உண்டாக்குவதிலும், தங்க விக்கிரகங்கள் செய்வதிலும், அவைகளுக்குப் பொன்னிலும், மணியிலும், இரத்தினங்களிலும் ஆபரணங்கள் செய்து பூட்டுவதிலும், அவைகளின் ஊர்வலங்களுக்காகப் பெருந் தேர்கள், வெள்ளி, செம்பொன் வாகனங்கள் செய்வதிலும், வீண் ஆடம்பரமான திருவிழாக்களை அடிக்கடி கொண்டாடுவதிலும், ஆயிரக்கணக்கான பார்ப்பனச் சோம்பேறிகளுக்குத் தினசரி மூன்று வேளையும் உயர்தரமான தெண்டச் சாப்பாடு போடுவதிலும், பற்பல விதமான யாகங்கள் புரிவதிலுமே பொருளெல்லாம் தொலைத்துக் காலமெல்லாம் கழித்து விட்டனர் என்பதே போதிய சான்றுகளாகும்.

இன்னும், அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடந்த சாதிப் பிணக்குகளும், சமயச் சண்டைகளும், மன்னர்களுக்குள்ளும் நிலையான நம்பிக்கை இல்லாததால் நேர்ந்த மத மாற்றங்களும், பிற மதத்தினர்மீது சீற்றங்களும், அற்பத்தனமாக அரசர் கொலுவிலே மதப் பிரச்னைபற்றிய விவாதப் பந்தயங்களும், ஒருவனுக்

கொருவன் மௌட்டீக வாதத்தில் தோற்றுனென்று நூற்றுக்கணக்கான மக்கள்களைக் கழுமரங்களில் ஏற்றிக் கொலைபுரியுங் கொடுமைக் குணமும்; ஒரு மன்னன், ஒருத்தி மணாளனுக்கு அநீதி வழங்கினுனென்று, அவள் அந்த மன்னனை மாத்திரமின்றி குடிகளெல்லோரையும் சேர்த்து ஊரோடு கொளுத்தி விட்டது நீதி என்றும், தெய்வீக சக்தி என்றும் போற்றிப் புகழக்கூடிய மதியீனமும்; ஐந்து ஆடவருக்கு ஓர் பெண் மனைவியாக இருந்தாலும் அவள் பத்தினியே என்று எண்ணக்கூடிய பயித்தியக்காரத் தனமும்; அத்தகைய பொதுவுடைமைப் பத்தினியை ஐவரில் ஒருவன் தனியுடைமையாகக் கருதிச் சூதாடக்கூட உரிமையுண்டு என்று எண்ணி எழுதியவர்களே புலவர்களாகவும், கட்டிய மனைவியைக் கடைத் தெருவில் கொண்டுபோய் விலை கூறியவர்களே சிவனடியார்களாகவும், விலைக்கு விற்றவனே சத்திய வந்தனுகவும், சூதாடித் தோற்றவனே தர்மனுகவும், வேதியர்களோடு விபசாரம் செய்யவிட்டவர்களே ஆழ்வார்களும், நாயன்மார்களுமாகக் கருதிப் போற்றப்பட்டனர். சிவன் கோயில் பார்ப்பனர் தின்பதற்குரிய தெண்டச் சோற்றுக்காகச் சேமித்து வைத்திருந்த நெல்லைப் பஞ்ச காலத்தில் பசிக்கொடுமை தாங்காதபோது, தன்னைப்பெற்ற தாய் தந்தையரும், தான் பெற்ற புதல்வர்களும், தன்னுடைய மனைவியும், மற்றும் உள்ள உற்றுர் உறவினர்களும் எடுத்து உணவாக்கித் தின்றதற்காக அவர்கள் எல்லோரையும் வாளாயுதத்திஞல் வெட்டிக் கொன்று குவித்ததோடு, அந்த நெல்லை உண

வாக்கித் தின்றவர்களில் ஒருவனுடைய முலைப்பாலைக் குடித்ததுகூடக் குற்றமென்று கூறி ஒரு பச்சிளங் குழந்தையை எடுத்துப் பந்தை வீசுவதுபோல் உயர வீசி அது கீழே வரும்போது, அதற்கு நேரே தன் னுடைய வாளைப் பிடித்து அக் குழந்தையையும் இரண்டு துண்டாக விழும்படி வெட்டிக்கொன்றவ ணுகியக் கோட்புலி என்பவன் சோழ மன்னனொருவ னுக்குச் சேனைத் தலைவனுக இருந்து அக் கொடும் பாதகச் செயலை (இனக்கொலை)த் துணிந்து செய்த மைக்காகச் சிவனடியாரில் சிறந்தவனுகவும், மன்னர் களாலும் கருதப்பட்டானென்றுல்! அந்தக் காலத் தில், மூவேந்தர்களின் மனப்பான்மை எவ்வாறிருந் திருக்கும் என்பதற்கும், ஆரியத்தின் அடிவருடிக ளாகிய அம் மூடமன்னர்களால் பாமர மக்கள் எவ் வளவு கடுமையான கொடுமைகளுக்கும், கண்மூடித் தனமான ஆரியமத ஆதிக்கத்திற்கும் இடையில் சிக் குண்டு சித்திரவதைப்பட்டுச் சின்னபின்னமாகச் சிதைந்திருக்கக்கூடும் என்பதற்கும் ஓர் எல்லையு முண்டோ?

இந்த இருபதாம் நூற்றுண்டின் விஞ்ஞான நாக ரீக ஆட்சியில்கூடச் சூத்திரத் திராவிடர்களாகிய தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமை மனித உள்ளம் படைத்த எவராலும் சகிக்க முடியாத அளவுக்குக் கொடுமையாகவும், கேவலமாகவும் இருக்குமேயானல் சுமார், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திரா விட நாடெங்கும் ஆரியம் தலைவிரிகோலமாய்த் தாண் டவமாடியபோது, திராவிட வேந்தர்கள் ஆரியத்தின்

அடிமைகளாக இருந்து மனுநீதி தர்மசாஸ்திரத்தின் படி ஆட்சி நடத்திய காலத்தில் சூத்திரத் திராவிடர்களின் கதி எவ்வாறிருந்திருக்குமோ! என்று எண்ணும்போது இருதயமே வெடித்து விடுவது போன்ற உணர்ச்சி ஏற்படவில்லையா? ஆம்! உயர்சாதித் திராவிடர்கள் வசிக்கும் வீதியிலோ! அல்லது வேதியர் எதிரிலோ! வந்த குற்றத்திற்காக எத்தனை சூத்திரத் திராவிடர்களின் கால்கள் வெட்டப்பட்டனவோ! அவர்களைத் தொட்டதற்காக எத்தனை சூத்திரத் திராவிடர்களின் கரங்கள் துண்டிக்கப்பட்டனவோ! வேதியர்கள் தின்னும்போது பார்த்த குற்றத்திற்காக எத்தனை சூத்திரத் திராவிடர்களின் கண்கள் குத்தப்பட்டனவோ! அந்தோ! அவர்கள் வேத ஒலியைக் கேட்டிருந்தால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியிருப்பர்! ஓதியிருந்தால் வாயில் எஃகுத் துண்டைக் காய்ச்சி எரிய எரிய வைத்திருப்பர்! அல்லது நாக்கையே வெட்டியிருப்பர்! சூத்திரத் திராவிடன் அக் கொடுமைகள் தாங்கமுடியாமல் துறவியாகத் துணிந்திருந்தால்கூட அவன் உடனே கொலை செய்யப்பட்டு விடுவானல்லவா? இராம ராச்சியத்தில், தவம் செய்த ஒரு சூத்திரனை இராமனே சென்று அவன் தலையை வெட்டிவிட்டதாகக் கூறுகிறதே இராமாயணம். ஏன்! திராவிட ராச்சியத்தில் அதைவிட மிகக் கொடுமையாக நடந்திருக்கிறதே! அதுவும் வெகு சமீப காலத்தில். மதுரைத் திருமலை நாயக்கன் என்ற திராவிட மன்னன் ஆட்சியில் ஒரு சூத்திரத் திராவிடன் ஆரியனுடைய வேத வாக்கியமாகிய "ஸஹஸ்ர சீரஸ்ரபுருஸ" என்ற சுலோகத்திற்கு

வியாக்கியானம் கூறுமாறு திருமலை நாயக்கனுடைய ராஜகுருவாகிய ஆரிய சாஸ்திரியைக் கேட்டபோது, அந்த ராஜகுரு திருமலை நாயக்கனிடமிருந்து ஒரு முகூர்த்த நாழிகை செங்கோலைக் கைப்பற்றிக் கொண்டு, அந்தச் சூத்திரத் திராவிடனைக் கழுமரத்தில் ஏற்றி உச்சிக்குமேல் பத்து அங்குலச் சூலம் எழுப்பி, "சூத்திரப்பயல் வேதத்திற்கு வியாக்கியானம் கேட்டான், சூத்திரர்களுக்கு வேதத்தின் வியாக்கியானம் இத்தன்மையே யாகும்" என்று கூறியுமிருக்கிறான். ஆரிய அடிவருடிகளின் சந்ததியிலுதித்துத் தன்மானமிழந்தத் திராவிட மன்னன் திருமலை நாயக்கனே! தன் இனத்தில் ஒருவனை, ஆரியன் இழிவாகக் கருதி வேதவியாக்கியானம் கூற மறுத்ததோடல்லாமல், கழுமரத்திலும் ஏற்றிக் கொலை புரியும்போதும் தடுக்காது நின்றுவிட்டான்; அதுமட்டுமா! அந்த ஆரியன் கூறிய தீர்ப்பின் பிற்பகுதியிருக்கிறதே! '.........சூத்திரர்களுக்கு வேதத்தின் வியாக்கியானம் இத்தன்மையே யாகும்.' என்ற வாக்கியம், அவன்போன்ற முழுமூட மன்னர்களின் முதுகுகளில் ஆரியன் அடிக்கடி போடும் சூடுகள் என்றறிந்தும், மன்னனே சரணையற்றிருந்துவிட்டானென்றால்! சாதாரண மக்களின்நிலை எத்தகையதாக இருந்திருக்க வேண்டும்?

7. ஆரியமும் வடநாடும்.

அந்தக் காலத்தில், வடநாட்டிலும் ஆரியமத ஆதிக்கத்தின் கொடுமையும், ஆரியர்களின் நயவஞ்

சனையான துரோகச் செயல்களும், அங்குள்ள ஆரிய அரசர்களின் கொடுங்கோலாட்சியும், அந்நாட்டில் வியாபாரத்தின் காரணமாக வியாபித்திருந்த திராவிடர்களையும், ஆரியர்கள் (குடியேறிய பிறகு அங்குள்ள பூர்வீகக் குடிகளாக விளங்கிய திராவிடர்கள் பலரை அடிமைப்படுத்தித்) 'தாசர்கள்' (வடநாட்டுச் சூத்திரத் திராவிடர்கள்) என்று அழைத்தார்களே! அத்தகைய பாமர மக்களையும் வெகுவாகத் தாக்கி அவர்களுடைய செல்வங்களையும், உழைப்புகளையும் வீணே சிதறடித்துக் கொண்டிருந்தன.

வடநாட்டில் ஆரியர்களுடைய அரசாட்சி முறையே யாகக் குழியையும், ஓமகுண்டத்தையுமே அடிப்படை பிரச்னையாகக்கொண்டு விளங்கியமையால் எங்கு நோக்கினும் மிருகங்களைப் பலியிடும் கோரங்களும், பலியிட்ட மிருகங்களை ஆரியர்கள் தங்களுக்குள் பங்கு போட்டுப் பக்குவம் பண்ணித் தின்றுகொண்டும், சோமபானம் என்ற மதுவகைகளைக் குடித்துக்கொண்டும், 'தாத்ரீய' வேதவியாக்கியானப்படி விபசார லீலைகளைப் புரிந்துகொண்டும் சதா கொலை, கொள்ளை, சோரம் முதலிய கிரியைகளை மதத்தின்பேரால் அரசாங்க உதவியுடன் தங்கு தடை இல்லாமல் நடத்திக்கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் அங்கு, காபூல் வழியாகப் படைஎடுத்து வந்த வெளிநாட்டு மன்னர்கள் ஆரியர்களின் அரசாட்சிகளைக் கைப்பற்றிக்கொண்டு ஆங்காங்கு அரசர்களாய் விளங்க ஆரம்பித்தனர். அதுமுதல், ஆரியர்கள் ராச்சிய பரிபாலனம் புரியும் எண்ணத்தை

அறவே ஒழித்துவிட்டு, எந்த அரசன் பட்டத்துக்கு வந்தாலும் சரி! எந்த அரசன் பட்டத்தைத் துறந்தாலும் சரி! தம்முடைய யாகங்களும், ஓமம் முதலிய பகட்டான கிரியைகளும், மத ஆதிக்கங்களும் தம்மைவிட்டகலாமல் இருப்பதோடு அவைகள் மீது மக்களுக்கு நம்பிக்கையும், பக்தியும் ஏற்படுவதற்கான உபாயங்களைக் கையாளுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்தனர்.

மனுநீதி தர்ம சாஸ்திரத்தின் கோட்பாடுகளைத் திரித்துக் கூறி மக்களை மயங்க வைத்தனர்; பிரபுக்களையும், அரசர்களையும் அணுகி யாகங்களைப்பற்றிப் பற்பலவிதமாகப் பெருமைப்படுத்தி எழுதிக்கொண்டு வந்த ஏடுகளைப் படித்துக்காட்டி 'அந்த யாகத்தைச் செய்தவன் சிவானுக்கிரகம் உடையவனுவான், இந்த யாகத்தைச் செய்தவன் தேவேந்திரனுக்குச் சமமாவான், இப்படி ஒரு யாகம் செய்து முடித்துவிட்டால் மோட்ச சாம்ராச்சியத்தை அடையலாம், அப்படி ஒரு யாகத்தை மட்டும் நடத்திவிட்டால் போதும்; பகைவர்களெல்லாம் அடியோடு மாண்டுவிடுவார்கள், மழை பெய்யும், நிலம் விளையும், என்றெல்லாம் பொய்யும் புரட்டுமாகப் பேசி வடநாட்டு மக்களையும், மன்னர்களையும் ஏமாற்றி ஆரியமதக் கொடுமைகளை நிலைநாட்டி எப்போதும் போலவே ஆரியர்கள் யாகத்தின்பேரால் பலி பாதகங்களைப் புரிந்துகொண்டும், மதத்தின்பேரால் பாமர மக்களைக் கொடுமைப் படுத்திக்கொண்டும் வாழ வசதி செய்துகொண்டு விட்டனர்.

ஆகவே, அன்று இந்திய உபகண்டம் முழுவதும் ஆரியமத ஆதிக்கத்தில் சிக்கிப் பெரும்பான்மையான மக்கள் சொல்லொண்ணு இன்னலையும், இழிவையும், ஏழ்மையையும் அனுதினமும் அநுபவித்துக்கொண்டிருப்பதே, தத்தம் தலைவிதி என்றும், ஊழ்வினை என்றும் ஆரியர்களால் உபதேசம் செய்யப்பட்டிருக்கின்றனர். ஓயா உழைப்பும், ஒழியாப்பிணியும், பட்டினியுமே பாவங்களைப் போக்கும் பரிகாரங்களாகும் என்று பாமரமக்கள் நம்புமாறு ஆரியர்கள் பலவிதப் பிரச்சாரங்களைச் செய்துகொண்டிருந்தனர். ஒரு பாவமும் செய்தறியாத சிறுவர்களையும், பெரியவர்களையுங்கூடக் கொடுமைப்படுத்தும் ஆரியர் வேதாந்த சூழ்ச்சிகளை மறைத்து, அதெல்லாம் கடவுள் சோதனைகளென்றும், லீலா விநோதங்களென்றும் கூறிப், புண்பட்டுப் புழுங்கும் வீராங்கனைகளையும் பொறுமையோடும், மூடப்பக்தியோடும் வாழப் பழக்கிவிட்டனர்.

அத்தகைய கண்மூடிப் பழக்கத்தில் மூழ்கிய மக்கள் தம் வாழ்க்கையைப் பாழ்படுத்தும் பாதகர்களாகிய ஆரியர்களின் காலடியில் வீழ்ந்து நசிப்பதையும், படுபாதகர்களான ஆரியக் குருமார்கள் தாங்கள் செய்வது வெறும் ஏமாற்றம் என்பதை மனப்பூர்வமாக அறிந்திருந்துங்கூடப் பண ஆசையாலும், ஆதிக்க அவாவினுலும், யாகத்தின் மீதுள்ள மோகத்தினுலும் அப்பாமரமக்களுக்குக் குருட்டுத்தனமான மூட நம்பிக்கைகளையே வேதவாக்கியங்களென்று கூறி மேலும் மேலும் பயமும், பக்தியும் வளரச்செய்து

கொண்டிருந்ததையும் இரஜ புத்திரவம்சத்தில் ஒரு வனுகிய கௌதமன் உணர்ந்தான்; உணர்ந்ததும் உள்ளம் உருகினுன்; ஊர் முழுவதும் சுற்றி நேரிலும் பார்த்தான் ஆரியர் கொடுமையால் மக்கள் நடைப் பிணங்களாய் உழலுவதை!

8. ஆரியத்தின் வைரிகள்.

கௌதமன் ஓர் இளவரசன். ஆரியர் கொடுமையைத் தான் பட்டத்திற்கு வந்த பிறகு தனது அதிகாரத்திஞல் அகற்றிவிட முடியும் என்று அவன் துணியவில்லை. காரணம்! கௌதமன், ஆரியர்களே எதிர்த்த திராவிட மன்னர்களின் சரித்திரங்களைப் படித்திருப்பான்! அத்தகைய மன்னர்கள் மீது ஆரியர்கள் சுமத்திய பழி பாதகங்களைக் கொஞ்சமும் ஆராயாமல், மக்கள் தமது மூட நம்பிக்கைகளிஞல் இன அரசுக்கே இடுக்கண் விளைத்ததைக் கண்டு கலங்கிய மூவேந்தர்களைப் போலவே கௌதமனும் கலங்கியிருப்பான்! ஆனுல், கௌதமனின் ஒப்பற்ற தியாக சிந்தை, மூவேந்தர்களைப் போல் ஆரியர்களின் அடிமைகளாக இருந்தேனும் அரசாண்டால் போதும் என்ற எண்ணத்திற்கு இடங் கொடுக்கவே இல்லை., இதனுல் தான் கௌதமன் பட்டத்தைத் துறந்து, நாட்டை விட்டுக் காட்டுக்குப் போய், போதி விருட்சத்தின் அடியிலமர்ந்து ஆரியக் கொடுமைகளை ஒழிப்பதெப்படி என்று பல காலமும் சிந்தித்துக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான்.

வஞ்சத்தை வஞ்சத்தாலே வெல்லவேண்டும்! வயிரத்தை வயிரத்தாலே அறுக்கவேண்டும்!! மதத்தை மதத்தாலேயே ஒழிக்கவேண்டும்!!! இதுதான் கௌதமனுடைய சித்தாந்தம். இதனால் சாதாரணக் கௌதமன், தான் ஒரு பெரிய மகாத்துமா (புத்தன்) என்றும், தனக்கு உதயமாகிய உன்னதமான, உண்மையான மதமே, 'புத்தம்' என்றும், மிகவும் தீவிரமாக, ஆனால் எச்சரிக்கையுடன்! ஆரியத்தை எதிர்க்கும் பிரச்சாரப் போர் முனையை அமைத்து வேலைசெய்ய முடிந்ததெனலாம்.

புத்த மதத்தின் கொள்கைகள் என்ன? அன்று இராவணன், இரணியன் முதலானவர்கள் என்ன சொன்னார்களோ! அதுவேதான்! "யாகங்கள் செய்யக்கூடாது; சாதிபேதங்கள் இருக்கக்கூடாது; உயிர்ப்பலி கூடாது; உழைக்க ஒருவனும், உண்க ஒருவனுமாக இருக்கக்கூடாது. பணத்தாசையாலும் பிறர் பொருளைக் கவரும் நோக்கத்தாலும் கற்பனைக் கதைகளையும், பொய் பித்தலாட்டங்களையும் கூறி மக்களை ஏமாற்றக்கூடாது. மனோ வாக்குக் காயங்களால் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதையே செய்யவேண்டும்." இவைகள் சர்வ சாதாரணமான ஒழுக்கங்கள். இவற்றை அந்தக் காலத்தில் மக்களிடையே போதித்த மன்னர்களைத்தான் ஆரியர்கள் எதிர்த்துத் தூற்றினர்; அரக்கர், அசுரர், நாத்திகர் என்று பழி சுமத்திக் கதை கட்டிவிட்டனர். கௌதமன் அத்தகைய பழிகளுக்கு அஞ்சியே பட்டத்தை விட்டு ஓடினான்! ஆனால், சாதாரணக் கௌதமனாக இருந்துகொண்டே

னும் ஆரியத்தை எதிர்த்து ஒழுக்க உபதேசம் செய் திருப்பானேல், கௌதமனுக்கு ஆரியர்கள் பயித்திய காரப்பட்டம் சூட்டிக் காட்டிற்கே துரத்தி விட்டி ருப்பார்கள்! நல்லவேளையாகக் கௌதமன் ஆரியர் சூழ்ச்சிக்கு எதிர் சூழ்ச்சியாக ஓர் மதப்போர்வையை உண்டாக்கி அதற்குள் ஒளிந்து தன்னைத் தற்காப்பு செய்து கொண்ட பிறகு, ஆரியர் கோட்பாடுகளை எதிர்க்கும் பணியிலிறங்கினதால் ஓரளவுக்கு வெற்றி பெற்றான் என்றே கூறலாம்!

கௌதமனுக்குப் பிறகு வைசாலி நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்த வர்த்தமானன் என்பவன் ஜைனமதத்தை ஏற்படுத்தினான். இவனுடைய நோக் கமும் ஆரியர் கொடுமையிலிருந்து மக்களைக் காப் பாற்றவேண்டும் என்பதுவேதான். இவன் தன்னு டைய ஐம்புலன்களையும் வென்றுவிட்டதாகக் காட்டி மகாவீரன் என்ற பட்டமும் பெற்றான். இதன் கருத்து, 'ஆரியர்கள்தான் துறவிகளாக அருகதை யுடையவர்கள் என்றும் மற்றவர்கள் யாரும் துறவி களாகக் கூடாது என்றும்' ஆரியர் ஏற்படுத்தி யிருந்த திட்டத்தைத் தகர்த்தெறிவதேதான்.

ஆகவே, ஆரிய மதக் கொடுமைகள் தாங்காது வாழ்க்கை மீது வெருப்புக்கொண்ட மக்களெல்லாம் ஜைன மதத்தையே தழுவ ஆரம்பித்தனர். ஆரி யத்தை எதிர்த்து ஏககாலத்தில் இரண்டு மதங்களும் போட்டி இட்டன. புத்தமதத்தை அசோகச் சக்கர வர்த்தி ஏற்று அவனுடைய சாம்ராச்சியம் முழுவதும் மிகத் தீவிரமாகப் பரவச் செய்தானாகையால், அங்

தக்காலத்தில் வட இந்தியாவில் ஆரியம் ஓரளவுக்குத் தேய்ந்து கொண்டிருந்ததெனலாம்! ஆனால், ஆரியர்கள் குள்ளநரித் தந்திரமுடையவர்கள்; சமயம்போல் கொள்கைகளை மாற்றி அமைத்தேனும், தங்கள் சாதியையே மேன்மைப் படுத்திப் பிரச்சாரம் செய்து வாழ்வதே தொழிலாகக் கொண்டவர்கள். ஆகையால், புத்த, ஜைன மதங்களை அநுசரித்துப் புலாலுண்பதையும் சோமபானம் பருகுவதையும் கூடாதென்று திருத்திக் கொண்டனர். எனினும், யாகம் செய்வதையும், பலி யிடுவதையும், சாதிக் கொடுமைகளையும் கைவிடாமையால், புத்த ஜைன, மதங்களால் புத்தறிவு பெற்ற மக்கள் ஆரியத்தை வெறுக்கத் துணிந்தனர். இந்தக் காலத்திலே தான் ஆரியம் வட இந்தியாவில் சீணித்திருந்ததெனலாம்!

9. மக்களை மயக்கிய மதங்கள்.

அசோகன் காலத்திற்குப் பிறகு, புத்த மதப் பிரச்சாரம் குறைந்து, ஆரிய மதப்பிரச்சாரம் மீண்டும் வலுவடைய ஆரம்பித்தது. மகத தேசத்தரசனாகத் தோன்றிய புஷ்யமித்ர சங்கர் கிரேக்கர் தாக்குதலையும், கலிங்கர் படை எடுப்பையும் எதிர்த்து வெற்றி கொண்டதற்கு அறிகுறியாக அஸ்வமேத யாகம் நடத்தியிருக்கிறான். எனவே, இவன் காலத்திலிருந்து மறுபடியும் ஆரிய மதம் தலைதூக்க ஆரம்பித்து விட்டதென்றே கருதலாம்.'

கி. மு. 200-க்கும் கி. பி. 100-க்கும் இடையில் வட இந்தியாவின் மீது படையெடுத்து வந்த வெளிநாட்

டினர்களில் சாகர்கள் ஒரு கூட்டத்தினராவார். சாகர்கள் முதலில் பஞ்சாப் தேசத்தை அடைந்தனர். பிறகு குஜராத், சிந்து, மாளவம் முதலிய தேசங்களை வென்று ஆண்டனர். சாக அரசர்களில் முக்கியமானவராகிய **கோண்ட பர்னஸ்** காலத்தில் **செயின்ட் தாமஸ்** என்ற கிருஸ்துவப் பாதரி வட இந்தியாவிற்கு வந்து, அங்கு மீண்டும் புத்துயிர் பெற்று ஆதிக்கம் செலுத்தும் ஆரிய மதத்திற்கு விரோதமாக கிருஸ்தவ மதத்தைப் போதிக்கத் துணிந்தார். ஆரிய மதக் கொடுமைகளுக்கு அஞ்சிய மக்கள் பலர் கிருஸ்துவ மதத்திலும் சேர்ந்தனர். அதனால், பொருமை கொண்ட ஆரியர்கள் தமது ஆரியமதத்தில் பாமரமக்களும் வெளி வேடத்தில் கலந்து கூத்தாடுமாறும், கோலாகல லீலா விநோதக் காட்சிகளைக் கோவிலில் கண்டு மயங்குமாறும், பகட்டான பற்பல நடவடிக்கைகளையும், தேர்த் திருவிழாக்களையும் வடநாட்டிலும்உண்டாக்கி ஆரிய மதத்தின் கொடுமைகளை மறந்து ஆரிய மதத்திலேயே நிலைத்திருக்குமாறு மக்களுக்கு உற்சாகம் ஊட்டிக் கொண்டிருந்தனர். ஆரிய மதத்தின் இப்புதிய நடவடிக்கைகளாலும், கிருஸ்துவ மதப் பிரச்சாரங்களாலும், புத்தமதம் சீணிக்கத் தொடங்கி விட்டது.

கி. பி. 120-ம் ஆண்டு முதல் பெஷாவரைத் தலை நகராகக்கொண்டு ஒரு பெரிய ராச்சியத்தை நிறுவிய குஷான் இனத்தின் தலைசிறந்த மன்னனாகிய கனிஷ்க்கர், புத்தமதம் சீணித்துக்கொண்டிருப்பதைக் கண்டு அதைப் பாமரர்களும் மேற்கொள்ளும்படி புத்தமதத்தில் சடங்குகளையும் உற்சவங்களையும், நடத்

தவும், புத்தரைக் கடவுளாகவே பாவித்து அவருடைய விக்கிரகங்களை வைத்து ஆராதிக்கவும், ஆரிய மதத்தில், கையாளப்படும் எல்லாவிதமான பகட்டுக்கிரியைகளையும் ஏற்படுத்தி வைத்தான். எனினும், புத்தமதம் இந்தியாவில் அதிக வெற்றியடைய முடியாதபடி ஆரியர்களின் எதிர்ப்பு மிகவும் தீவிரமாக இருந்து வந்தது. இதனால், கனிஷ்க்கர் காலத்தில் சீன தேசம் முழுவதும் பரவிய புத்தமதம் வட இந்தியாவில்கூடச் சரியாக நிலைத்திருக்க முடியாமல் போய் விட்டது. கிரேக்கர்களுடைய தொடர்பினாலும் புத்த மதக் கலாச்சாரங்களில் மாறுதலேற்பட்டுக் காந்தாரக்கலை வளர்ந்தது; குகைக் கோயில்களும், சிகரங்களும், புத்த விக்கிரகங்களும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டன.

ஆகவே, பிற்காலத்தில், விக்கிரக வணக்கங்களையும், பகட்டான கிரியைகளையும் வெருத்துத்தள்ளிச் சாதிக் கொடுமையை ஒழிக்கத் தீவிர முயற்சி செய்த கிருஸ்துவ மதமும், அம்முயற்சியில் வெற்றி பெற்ற முஸ்லிம் மதமும் வட இந்தியாவில் மிகவும் வேகமாகப் பரவி நீண்டகாலமாக நிலைபெற்று விட்டன.

12வது நூற்றாண்டில், திராவிட நாட்டில் பாண்டிய மன்னர்கள் பலம் பெற்ற வல்லரசு அமைத்திருந்தனர். அவர்களில் முக்கியமானவன் சுந்தர பாண்டியன். அவன் காலத்தில் திராவிட நாட்டின்மீது செய்யத் இபுருஹீம் என்ற அரபியப் போர்வீரன் பெருஞ்சேனையுடன் படை எடுத்து வந்து தெற்குக் கடற்கரையோரத்தில் உள்ள பிரதேசத்தில் பாண்டி

யர்களுடன் போராடி யுத்தத்தில் மாண்டான். செய்யத் இப்ருஹீம் சேனைகளோடு வந்திருந்த முஸ்லிம் மதபோதகர்கள் (முல்லாக்கள்) மேற்குக் கடற்றக்கரைப் பிரதேசங்களாகிய சேர நாட்டிற்குள் சென்று குடியேறி, அங்கேயே முதன் முதலாக முஸ்லிம் மதப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர்.

ஆரியர்களின் மதக் கொடுமையினாலும், சாதித் திமிரினாலும் சிதைந்து சின்னாபின்னப் படுத்தப்பட்டிருந்த திராவிட மக்களில் ஒரு பிரிவினராகிய சூத்திரத் திராவிடர்கள் வெகு சுலபமாக முஸ்லிம் மதத்தில் சேர்ந்து இழிவும், இன்னலும் இல்லாமல் வாழப் பழகி விட்டனர். அவ்விதம் பழகிய திராவிட முஸ்லிம்களே, தம் இனத்திலேயே இழிவுடன் வாழும் சூத்திரத் திராவிடர்களையும், மற்றத் திராவிடர்களையும் முஸ்லிம் மதத்தைத் தழுவுமாறு பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். அதனால், சோழ, பாண்டிய ராச்சியங்களிலும் வெகு தீவிரமாக முஸ்லிம் மதம் பரவியது.

பிறகு, 25-வது நூற்றாண்டில் மேற்குக் கரையில் கடல்மார்க்கமாக வந்திறங்கி வியாபாரம் செய்த போர்த்துகேசியர்கள் திராவிட நாட்டில் தங்கியதும் கிருஸ்துவ மதப்பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தனர். கிருஸ்துவ மதத்திலும் சூத்திரத் திராவிடர்களே பெரும்பாலும் சேர்ந்தனர்.

ஆகவே, ஆரிய மதக் கொடுமைகளையும், இழிவுகளையும் சகிக்க முடியாமல் இந்திய உபகண்டத்தி

லுள்ள பூர்வீகத் திராவிடர்களின் சந்ததிகள் பௌத்தர்களாகவும், ஜைனர்களாகவும், கிருஸ்தவர்களாகவும், முஸ்லிம்களாகவும் மாறிவிட்டனர்; இன்னும் மாறிக்கொண்டும் இருக்கின்றனர். எனவே, 'திராவிட நாட்டில் பிற்காலத்தில் வந்த மேனாட்டாரும், அவர்தம் கலப்பற்ற சட்டைக்காரரும், தவிர (பார்ப்பனர் நீங்கலாக) மற்றவரெல்லாம் திராவிடரே. திராவிட நாட்டின் வடக்கில் லெப்பை என்றும், கிழக்கில் மரைக்காயர் என்றும், தெற்கில் இராவுத்தர் என்றும், மேற்கில் மாப்பிள்ளை என்றும் அழைக்கப்படும் முஸ்லிம்களெல்லோரும் பிறப்பால் தமிழ்நாட்டுக் கிருஸ்தவரைப்போல் தமிழர் அல்லது திராவிடர்களே யாவர்!'

இந்திய உபகண்டத்தில் ஆரியத்தை வேரூன்ற விடாது விரட்டியிருந்தாலோ! அல்லது திராவிட நாட்டிற்குள்ளேனும் தலை நீட்ட விடாமல் தடுத்திருந்தாலோ! இன்று இங்கு இத்தனை சாதிப் பிரிவுகளும், சமயப் பூசல்களும் தோன்றி இருக்க முடியாததோடு, நாம் நமது முன்னோர்களின் முயற்சியைப் பின்பற்றி இந்நேரம் உன்னதமான பண்பும், உயர்ந்த நாகரீகமும் வாய்ந்த உண்மைத் திராவிடர்களாகவே வாழ்வோம்! நமது திராவிட அரசும் உலக வல்லரசுகளில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக விளங்கும் என்பதற்கு எள்ளளவேனும் ஐயம் உண்டோ?

இனி, நாம் புரியவேண்டிய நமது இன்றியமையாத கடமை என்ன? 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்பதுதானே! இதை அன்றும், இன்றும் மறுப்

பவர் யார்? ஆரியரன்றோ? திராவிடர்களின் சிறப்பை மீண்டும் நிலை நாட்டத் திட்டமிட்ட திராவிட மன்னர்களாகிய இராவணன், இரணியன் முதலானவர்களை ஆரியர்கள் எதிர்த்துத் தூற்றினர். திராவிடர்களின் பண்பிற்குப் புத்துயிரூட்டவந்த புத்த, ஜைனப் போதனைகளையும் எதிர்த்து ஒழித்துவிட்டனர்! திராவிடர்களின் இன்றைய இழிநிலையை அழித்துச் சமத்துவ வாய்ப்பளிக்க உதவும் கிருஸ்துவ, முஸ்லிம் மதங்களையும் மறைமுகமாக எதிர்ப்பதோடு முஸ்லிம்களுக்கும் மற்றவர்களுக்கும் பகையை உண்டாக்கி ஒருவரோடொருவர் சண்டையிட்டு வட இந்தியாவெங்கும் இரத்தக்கறை படியுமாறு சூழ்ச்சி செய்து கொண்டும் இருக்கின்றனர்.

அத்தகைய ஆரியர் சூழ்ச்சி திராவிட நாட்டிலும் பரவிப் பெருங்கேடு விளைத்து விடாதபடி எதிர்த்துப் பாதுகாத்து வரும் இன்றையத் திராவிடத்தின் தந்தை, இராவணன் வழித்தோன்றல், குள்ளநரிக் குணம் படைத்த பார்ப்பனியத்தின் கூற்றம், எம் திராவிடர் பெருமான், வைக்கம் வீரர், **பெரியார் ஈ. வெ. ராமசாமி** அவர்களையும் எதிர்த்து, நாத்திகன் என்று இழித்துக்கூறித் தூற்றுவது எது? அதே ஆரியமே அல்லவா? ஆம்! இந்தப்போர் இவ்வுபகண்டத்தில் சுமார் மூவாயிரம் ஆண்டுகளாக நடைபெறுகின்றன! **நாம் திராவிடர் !!** நமது பரம்பரை வைரியே ஆரியம் !!!

———

R34
N47
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 103850

நாடகாபிமானிகளுக்கு ஓர் நற்செய்தி!

பூர்வீகத் திராவிடர்களின் புனிதமான வாழ்க்கை வரலாற்றுள் ஓர் திடுக்கிடும் கோரச் சம்பவம்!

ஆரியர்கள் வருகைக்குப் பிறகு ஓர் இரவில் நடந்த உண்மைகள்!!

வீரம், தியாகம், காதல் திராவிடர்களின் மூதாதைகளிடம் எவ்வாறு விளங்கிற்று என்பதற்குச் சங்க இலக்கியச் சான்றுகளோடு நாடக வடிவில் உருவாகிவிட்ட,

திராவிடப் பூபதி

என்ற நூலில் கூடிய சீக்கிரம் காண்பீர்களாக!!!

வெளியிடுவோர்:

திராவிட கலா நிலையம்,

55, முக்தாருன்னிஸா பேகம் தெரு,

மவுண்ட்ரோடு, :: சென்னை.

எங்கும் புகழ் பெற்ற எங்கள்

BENGAL
Kalighat
DENTAL
POWDER

பெங்கால் காலிகட் பற்பொடி
தந்தரோகங்களைப் போக்கிச் சுகந்தமும் சுத்தமும் அளிக்கும்
UNIVERSAL CHEMICAL INDUSTRIES
9, Ramakrishnan Street, —:;— G. T. MADRAS

திராவிடர்களுக்கு ஓர் நற்செய்தி!



எங்கள் நிலையத்தில் எல்லாவிதமான கடிகாரங்களும், தையல் மிஷின்களும் குறித்த காலத்தில், குறைந்த விகிதத்தில் உத்தரவாதத்துடன் ரிப்பேர் செய்து - - கொடுக்கப்படும். - -

கிருஷ்ணா & கோ,
20-A, எல்லிஸ் ரோடு,
சென்னை 2.



வெகு விரைவிலே வெளிவரும்!

மறைத்து விட்டோம் என்று மனப்பால்
குடிப்போர் உள்ளம் திடுக்கிடக்
கூடிய உண்மைகள் !

உதயம்! உதயம்!! உதயம்!!!

'ஐக்கிய திராவிடம்'

ஆம்! பிரிவினையின் பிள்ளையே ஐக்கியம்!
ஐக்கியத்தின் தாயே பிரிவினை!!
பிரசவ வேதனையே புரட்சியாம்!!!

வெளியிடுவோர்

திராவிட கலா நிலையம்,

55, முக்தாருன்னிஸா பேகம் தெரு
மவுண்ட்ரோட், சென்னை.